விலை: சதம் 75

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

யாழ்.நகரில்
சிக்மா பம்ப்ஸ்
அதிகளவு விற்பனைபுரிபவர்கள்
தொலைபேசி : 508
ராம்சன்ஸ்
ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ்
19, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

# ஈழநாடு
## THE EELANADU

மலர் 23 ஆடி 8 றம்ழான் 20 இதழ் 159
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 23-7-1981

### ஆலால் இன்று சத்தியப்பிரமாணம்

[யாழ்ப்பாணம்]
கோப்பாய்த் தொகுதியின் புதிய எம். பி.யான திரு. மு. ஆலாலசுந்தரம் இன்று காலை பாராளுமன்றத்தில் சத்தியப் பிரமாணம் செய்வார்.

சட்டத்தரணியான திரு. ஆலாலசுந்தரம், 1971ம் ஆண்டுத் தேர்தலில் கிளிநொச்சித் தொகுதியில், தமிழரசுக் கட்சி சார்பில் போட்டியிட்டு, மிகக் குறைந்த வாக்குகளால் வெற்றி வாய்ப்பை இழந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. [க-அ]

★ அமிர் மீதான நம்பிக்கையில்லாத் தீர்மானம் இன்று விவாதம்

# 'அரச எம்.பி.க்களின் பேச்சுக்கள் அரசின் கருத்தாக அமையாது'

## மந்திரிசபையில் ஜனதிபதி

### கூட்டணி நிலை இன்றுகாலை தெரியும்

[கொழும்பு]
எதிர்க்கட்சித் தலைவர் திரு. ஏ. அமிர்தலிங்கத்திற்கு எதிராக இன்று பாராளுமன்றத்தில் கொண்டுவரப்படும் நம்பிக்கையில்லாத் தீர்மானம் மீது அரசாங்கக் கட்சி உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களைச் சுதந்திரகாகத் தெரிவிக்கவும், சுதந்திரமாக வாக்களிக்கவும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

ஜனதிபதி திரு. ஜே. ஆர் ஜெயவர்த்தன நேற்று நடந்த மந்திரி சபைக் கூட்டத்தில் இதனைத் தெரிவித்தார். சபை உறுப்பினர்கள் பேசும் பேச்சுக்கள் அவர்களின் சொந்தக் கருத்தாகவே கருதப்படுமேயன்றி அரசாங்கத்தின் கருத்தாகக் கருதப் படமாட்டாது என்றும் ஜனதிபதி குறிப்பிட்டார்.

தமிழர் விடுதலைக் கூட்டணிப் பாராளுமன்றக் குழு எதிர்க்கட்சித் தலைவருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை விவாதத்தில் கலந்து கொள்வதா இல்லையா என்பது பற்றி இன்று காலை 8 மணிக்குக் கூடி முடிவுசெய்வார்கள்.

அநேகமாக கூட்டணி எம். பி.க்கள் கலந்துகொள்வார்கள் எனக் கூறப்படுகிறது.

#### கூட்டணி வெளியேறும்

பிரேரணை விவாதத்திற்கு எடுக்கப்படு முன்னர் திரு.அமிர்தலிங்கம் தனிப்பட்ட விளக்கம் அளிக்க முயற்சிப்பார் என்றும், அது நிறைவேறுவிட்டால் பிரேரணை முன்மொழிந்து வழிமொழியப்பட்ட பின்னர் திரு. அமிர்தலிங்கம் தனிப்பட்ட விளக்கம் அளித்துவிட்டு கூட்டணி எம். பி.க்களுடன் வெளியேறுவார் எனத் தெரிய வருகிறது.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும் இன்று கலந்துகொண்டு ஒழுங்குப் பிரச்சினை ஒன்றை எழுப்புவார்கள் என்றும்,

[6 ... ... ார்க்க]

ஹோம் பினன்ஸ்
லிமிட்.
82,கன்னதிட்டி,(போன்:8310)யாழ்ப்பாணம்.
ரூபா 1000-க்கு மேற்பட்ட ஒருவருட வைப்பிற்கு ஆகக்கூடுதலான வருமானத்தை வழங்குகிறது.
30 % வருட முடிவில் வட்டி பெறுவோர்க்கு வருடம் 25 வீத வட்டியும் 3 வீத போனஸும் 2 வீத சேமிப்பும் ஆக மொத்தம் 30 வீத வருமானம் வழங்கப்படும்
28 % மாதாமாதம் வட்டி பெறுவோர்க்கு வருடம் 25 வீத வட்டியும் வருட முடிவில் 3 வீத போனஸும் ஆக மொத்தம் 28 வீத வருமானம் வழங்கப்படும்
இடைப்பட்ட காலத்தில் வைப்புப் பணத்தை மீளப்பெறுவோர்க்கு எதுவித வட்டிக் கழிவும் செய்யப்படமாட்டாது.
உங்கள் பணத்தை விவேகமாக முதலீடுசெய்யுங்கள்.
ஹோம் பினன்ஸ் நம்பிக்கையின் இல்லம்.
தலைமையகம்: 463, காலி வீதி, கொழும்பு-3
தொலைபேசி: 89190

அமிர் உறுதியை அடுத்து

## உண்ணாவிரதம் கைவிடப்பட்டது

[யாழ்ப்பாணம்]
கடந்த மூன்று தினங்களாக உண்ணாவிரதமிருந்த பரந்தன் கூட்டணிக்கிளைச் செயலாளர் திரு. அருமைநாயகம் எதிர்க்கட்சித் தலைவர் திரு. ஏ. அமிர்தலிங்கம் கடிதமூலம் அளித்த உறுதிமொழியைத் தொடர்ந்து நேற்று முன்தினமிரவு 10-30 மணிக்கு உண்ணாவிரதத்தை முடித்துக்கொண்டார்.

அவரது உடல்நிலை மோசமாகியிருந்ததால் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

யாழ். மாவட்ட அபிவிருத்தி சபையில் கிளிநொச்சித் தொகுதியைப் பிரதிநிதித்துவப்படுத்துமாறு கோரி திரு. அருமைநாயகம் கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை உண்ணாவிரதத்தை ஆரம்பித்தார்.

விகிதாசார அடிப்படையில் யாழ். மாவட்ட சபை கூட்டணி பட்டியலை மாற்றி அமைத்து சில தினங்களில் வெளியிடுவதாகவும் பின்னர் அதனைச் செயல்படுத்துவதாகவும் திரு. அமிர்தலிங்கம் கடிதத்தில் உறுதியளித்துள்ளார். [க-அ]

### யாழ்.எம். பி. புகார்: விசாரணை நேற்று ஆரம்பம்

[யாழ்ப்பாணம்]
யாழ். ஆஸ்பத்திரி வீதியில் கடமையாற்றிய பொலிசார் தம்மை எச்சரித்ததாய் யாழ். எம் பி. திரு.வி.யோகேஸ்வரன் பொலிஸ் அம்பருக்குச் செய்த புகார் தொடர்பான விசாரணை நேற்று ஆரம்பமானது.

பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. கிருஷ்ணராசா இதுபற்றிய விசாரணையில் ஈடுபட்டுள்ளார்.

விசாரணை முடிந்தபின்னர் பொலிஸ் அதிபரிடம் அறிக்கை சமர்ப்பிக்கப்படும். [க-அ]

## "நிரந்தர உறைவிட வசதி மக்களுக்கு அளிக்கவேண்டும்"

### -- யாழ்.மாவட்டச் செயலாளர்

[யாழ்ப்பாணம்]
"அரசாங்கத்தின் அபிவிருத்தித்திட்டத்தின்கீழ் மக்களுக்கு அடிப்படைத்தேவைகளில் ஒன்றான நிரந்தர உறைவிடவசதி அளிக்கவேண்டும் என்பதற்கமையவே இவ்வீடுகள் கட்டப்படுகின்றன."

யாழ். மாவட்ட செயலாளரும் அரசாங்க அதிபருமான திரு. தேவநேசன் நேசையா, நல்லூர்த் தொகுதியில் அமைக்கப்பட்ட 30 வீடுகள் கையளிப்பு வைபவத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

திரு. தேவநேசன் நேசையா பதவி ஏற்றபின் கலந்துகொண்ட முதலாவது பொது வைபவம் இதுவாகும்.

தேசிய வீடமைப்பு அதிகார சபையின் பிராந்திய முகாமையாளர் திரு. பி. இராமநாதன் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில், திரு. தேவநேசன் நேசையா தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

தேர்தற் தொகுதிக்கான இந்த வீடமைப்புத்திட்டம் பிரதம மந்திரியால் நாடுமுழுவதும் மூன்று ஆண்டுகளுக்கு முன்பு

[6ம் பக்கம் பார்க்க]

எமது வாடிக்கையாளர்களுக்கு——
மகிழ்வான செய்தி......
பினன்ஸ் வசதிகளுடன்
ஹொண்டா மோட்டார் சைக்கிள்
விபரங்களுக்கு;
மகாராஜா இன்வெஸ்ட்மென்ட் லிமிட்டெட்
122, கே. கே. எஸ். வீதி ... யாழ்ப்பாணம்.
போன்: 8267

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

பாவனையில் உள்ள அவெரி 10 அந்தர் [Avery] தராசும் ஆயில் டீசல் லொறியும் உடன் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு தொடர்புகொள்ளவும். [அலுவலக நேரங்களில்] க. வெற்றிவேல், 301, 1-வது மாடி, கன்னாதிட்டி சந்தி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 0399

இரண்டு தட்டுடைய கோழிக் கூடு விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்க:- 395, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். 0376

மானிப்பாய் கோவில் பற்று ப. நோ. கூ. சங்கம்

## வெற்றுச் சாக்கு விற்பனை

மானிப்பாய் கோவில் பற்று ப. நோ. கூ. சங்கத்தில் 3100 வெற்றுச் சாக்குகள் விற்பனைக்கு உண்டு. சங்கத்தால் விநியோகிக்கப்படும் கேள்விப் பத்திரத்தை ரூபா 200/- முற்பணம் செலுத்தி வாங்கிப் பூரணப்படுத்தி, பொதுமுகாமையாளர், மானிப்பாய் கோவில் பற்று ப. நோ. கூ. சங்கம் என்ற முகவரிக்கு 28-7-81ம் திகதிக்கு முன்னதாக கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்கவும்.

பொதுமுகாமையாளர்
மானிப்பாய் கோ. ப.
ப. நோ. கூ. சங்கம்,
மானிப்பாய்.
0404

கரைச்சி தெற்கு
ப. நோ. கூ. சங்கம்
கிளிநொச்சி

## கழிவு சீனி விற்பனைக்கான கேள்வி விளம்பரம்

எமது சங்கத்தில் மொத்த விற்பனை நிலையத்திலுள்ள கழிவு சீனி [Sweeping Sugar] விற்பனை செய்வதற்கான விண்ணப்பம் எம்மால் கோரப்படுகின்றன. இதை கொள்வனவு செய்ய விரும்புபவர்கள் 25-7-81க்கு முன் மீளப் பெறக்கூடிய வைப்புப் பணமாக ரூபா 50/- (ஐம்பது) வை எமது சங்கத்தில் செலுத்தி ரசீது பெறப்பட வேண்டும். விண்ணப்பத்தில் பணம் செலுத்திய ரசீதின் இலக்கம் குறிப்பிடப்படுவதுடன் 30-7-81ம் திகதி நண்பகல் 12-00 மணிக்கு முன் பொதுமுகாமையாளர், கரைச்சி தெற்கு ப. நோ. கூ. சங்கம், கிளிநொச்சி என்னும் விலாசத்துக்கு "கழிவு சீனி கொள்வனவு செய்வதற்கான கேள்வி" என இடதுபக்க மேல் மூலையில் குறித்து முத்திரையிட்டு அனுப்பவேண்டும்.

தெரிவு செய்யப்பட்டவர் அறிவித்தல் கிடைத்து மூன்று நாட்களுக்குள் முழுத் தொகையையும் செலுத்தி அவற்றை எடுத்துச் செல்ல வேண்டும்.

இங்ஙனம்
சு. பேராயிரசிங்கம்,
பொதுமுகாமையாளர்.
0375

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம்மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணை இன்று பாராளுமன்றத்தில் விவாதத்துக்கு எடுக்கப்படவிருக்கிறது. நாளை வெள்ளிக்கிழமையுமாக இரு தினங்களுக்கு நடைபெறவிருக்கும் இவ்விவாதத்தில் கலந்துகொள்வதா? இல்லையா என்பதுபற்றி கூட்டணி இன்னமும் உத்தியோகபூர்வமாகத் தீர்மானித்து அறிவிக்கவில்லை. கடந்த வாரம் கூடிய கூட்டணிப் பொதுச்சபை இதுபற்றி தீர்மானிக்கும் பொறுப்பை பாராளுமன்றக் குழுவிடம் கையளித்திருக்கிறது.. பாராளுமன்றக் குழுவில் இதுபற்றி ஏற்கனவே கருத்து வேறுபாடு நிலவிக்கொண்டிருந்தது. விவாதத்தில் கலந்துகொண்டு சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தவே வேண்டும் என்று ஒரு சாரார் எண்ணிக்கொண்டிருந்தனர். 'இந்தக் கேலிக்கூத்தில்' நாமும் ஏன் கலந்துகொள்ளவேண்டும் என்று மற்றையசாரார் கருதினர். இவ்வேளை திரு. அமிர்தலிங்கம் நாடுதிரும்பியதும் விவாதத்தில் கலந்துகொள்ளாது, சபாநாயகரின் அனுமதியுடன் தனிப்பட்ட விளக்கமொன்றை சபையில் திரு. அமிர்தலிங்கம் அளித்துவிட்டு அவைவாயில் வெளியேறுவது என்பது ஏறக்குறைய முடிவுசெய்யப்பட்டிருந்தது. ஆனால் சபாநாயகருடன் மேற்கொண்ட தொடர்புகளிலிருந்து 'தனிப்பட்ட விளக்கம்' சரிவராது என்ற நிலையில் விவாதத்தில் கலந்து

## அறிவித்தல்
## ஏலவிற்பனை
## உழுந்து

வவுனியா வடக்கு (நெடுங்கேணி) பல நோக்கு கூட்டுறவுச்சங்க அலுவலகத்தில் 5-8-81ம் திகதி காலை 11-00 மணிக்கு 25084 கி. கி. உழுந்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும், ஏலவிற்பனை பின்வரும் நிபந்தனைகளுக்கமைவாக நடைபெறும்.

1. பகிரங்க ஏலத்தில் கேள்வி கேட்க விரும்புபவர்கள் உழுந்தை சங்கக் கட்டமைப்பு நேரங்களில் பார்வையிடலாம்.
2. கேள்வி கேட்க விரும்புவோர் ஏல விற்பனை ஆரம்பிப்பதற்கு முன்னதாக ரூபா 5000/- மீளளிக்கப்படும் வைப்புத்தொகையாக செலுத்துதல் வேண்டும்.
3. கூடிய விலை கோரியவர்களுக்கே உழுந்து விற்பனை செய்யப்படும்;
4. ஏலமிடப்பட்டவுடன் ரூபா 25,000/- மீளளிக்கப்படும் வைப்புத் தொகையாகச் செலுத்துதல்வேண்டும். இப்பணம் உழுந்து முழுவதும் பணம் கட்டி அப்புறப்படுத்தப்பட்ட பின்னரே திருப்பித் தரப்படும்.
5. ஏலவிற்பனைத் தினத்திலிருந்து ஒரு கிழமைக்குள் பணம் செலுத்தி உழுந்து முழுவதும் அப்புறப்படுத்துதல்வேண்டும்.
6. உழுந்தின் மதிப்பீட்டு விலை கேள்வி கேட்பவர்களுக்கு பகிரங்க ஏலவிற்பனைத் தினத்தன்று தெரிவிக்கப்படும்.
7. இவ் ஏலவிற்பனை சம்பந்தமாக எந்தவிடயத்திலும் மேற்படி சங்கத்தின் தீர்ப்பே முடிவானதும் பூரணமானதும் ஆகும்.

(ஒப்பம்)
பொ. மங்களஜெயநாதன்
தலைவர்,
வ. வ. ப. நோ. கூ. சங்கம்.
வவுனியா வடக்கு.
ப. நோ. கூ. சங்கம்,
நெடுங்கேணி,
18-7-81.
0373

'அமிர்' மீதான அவநம்பிக்கை பிரேரணை

# இன்றைய விவாதத்தில் கூட்டணியின் நிலை?

கொள்வதுபற்றியே இப்போது தீவிரமாக இவர்கள் ஆலோசிப்பதாகவும், அநேகமாக கலந்துகொள்வார்கள் என்றும் தெரிகிறது.

கூட்டணி பாராளுமன்றக் குழு இன்று கூடுகிறது. கருத்துவேறுபாடுகள் எழுவது ஒன்றும் தவறானதல்ல. ஆனால் அவற்றை நன்கு ஆராய்ந்து தீர்க்கமான ஒரு முடிவை எடுக்கவேண்டியது அவசியம். விவாதத்தில் கலந்துகொள்வதா? இல்லையா? என்பதை தீர்மானிக்கும் இவ்விடயம் உண்மையில் கூட்டணியைப் பொறுத்தவரையில் பலவற்றைச் சிந்தித்து மேற்கொள்ள வேண்டியதே.

அரசாங்கத்தின் கூட்டணி தொடர்பான எதிர்காலக் கொள்கை இவ்விவாதத்தின் மூலம் தீர்மானிக்கப்படும் என்றும், அரச உறுப்பினர்கள் எவரும் தங்கள் கருத்துக்களையும் சுதந்திரமாகத் தெரிவிக்கலாம் என்றும்

**- மாலி -**

ஜனாதிபதி ஜயவர்த்தனா கூறியிருக்கிறார். இதேவேளை அரச உறுப்பினர்கள் இவ்விவாதத்தில் சுதந்திரமாக வாக்களிக்க அனுமதிக்க வேண்டுமென்று காலி எம். பி. டாக்டர் டபிள்யூ. தஹநாயக்க (ஐ. தே. க.) ஜனாதிபதியைக் கேட்டிருப்பது அவதானத்துக்குரியது. அத்துடன் இவ்விவாதத்தில் பிரதமரும் கலந்து கொள்ளமாட்டார். அவர் வெளிநாட்டுப் பயணம் மேற்கொண்டுள்ளார்.

விவாதத்தில் கலந்துகொள்வதா இல்லையா என்பதுபற்றி சுதந்திரக்கட்சியும் இன்னும் அறிவிக்கவில்லை. ஆனால் அது கலந்து கொள்ளுமென எதிர்பார்ப்பதற்கும் இடமுண்டு. விவாதத்தில் சுதந்திரக்கட்சி கலந்துகொள்ளுமாயின் அது இருதலைக்கொள்ளி எறும்பின் நிலையாகத்தானிருக்கும். தமிழ் மக்களின் ஆதரவையும் கூட்டணியின் 'நட்பை'யும் பேணுவதில் இவ்விவாதம் சுதந்திரக்கட்சிக்கு ஒரு சவாலே. இச்சவாலைச் சமாளிப்பதற்கு அதற்குள்ள ஒரே

[5ம் பக்கம் பார்க்க]

வடக்குக் கிழக்கிலிருந்து

# "ஆயுதப் படைகளை உடன் வாபஸ் பெறுக!"

## இலங்கை ஆசிரியர் சங்கம் தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

"வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் சகலருக்கும் எவ்வித நிபந்தனையுமின்றி வேலை வழங்கவேண்டும்".

மேற்கண்டவாறு இலங்கை ஆசிரியர் சங்கத்தின் யாழ் மாவட்டக்கிளை ஏகமனதாக தீர்மானமொன்றை நிறைவேற்றியுள்ளது.

திரு. நா. நல்லையா தலைமையில் யாழ். இந்துக்கல்லூரியில் நடைபெற்ற இக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட ஏனைய தீர்மானங்கள் வருமாறு:

"யாழ்ப்பாண நகரத்திலும் ஏனைய நகரங்களிலும் கிராமங்களிலும் அரசின் படையினரால் கட்டவிழ்த்துவிடப்பட்ட பயங்கர ஆட்சியின் போது சிலர் கொலை செய்யப்பட்டதையும், மற்றும் பலர் காயப்படுத்தப்பட்டதையும் தனியாரினதும் பொதுமக்களினதும் பலகோடி ரூபா பெறுமதியான சொத்துக்கள் நாசப்படுத்தப்பட்டதையும் மீண்டும் யாழ். பொதுநூலகம் போன்ற ஈடேற்ற முடியாத இழப்புகள் ஏற்படுத்தப்பட்டதையும், இச்சபை வன்மையாகக் கண்டிப்பதுடன் இவற்றுக்கான முழுப்பொறுப்பையும் இலங்கை அரசாங்கமே ஏற்க வேண்டும்.

வடக்கு கிழக்கு மாகாணங்களிலிருந்து ஆயுதப் படையினரை வாபஸ்பெறும்படியும்

(4-ம் பக்கம் பார்க்க)

யாழ்ப்பாண அத்தியட்சாதீனத்தினுள் இனுவிலில் தொடங்கப்பட இருக்கின்ற தாய் அல்லது தந்தை அல்லது இரண்டும் வாய்க்காத பிள்ளைகளுக்கான இல்லத்துக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தெரிவு செய்யப்படும் பிள்ளைகட்கு இலவச இருப்பிடம், உணவு, வைத்தியம், மற்றும் பயிற்சிகள் அளிக்கப்படும்.

16 வயதிற்குட்பட்ட இருபாலாரும் எம்மதத்தினரும் முழு விபரத்துடன் விண்ணப்பிக்கலாம், அருகாமையில் உள்ள புரட்டஸ்தாந்து குருவின் சிபார்சுடன் விண்ணப்பிக்கவும்.

**விண்ணப்ப முடிவு திகதி: 8-8-81**

முகவரி:
இல்ல பொறுப்பாளர்,
C/O வண. அ. ஜெயக்குமாரன்.
குருமனை, சங்கானை
0401



பூரண பாதுகாப்பினை உறுதிப்படுத்துங்கள்

**யூனியன்**

மடியுங் கேற்றுகளால்
திறந்தவையும்
மறைவானவையும்



தொழிற்சாலைகள், பண்டகசாலைகள் வாகன அறைகள், வங்கிகள், வர்த்தக தாபனங்கள், கடைகள், நகைக்கடைகள், இதர கட்டிடங்கள் அனைத்துக்கும் பூரண பாதுகாப்பளிக்க வரும் இன்று சுயமாக விரும்புவது யூனியன் மடியுங்கேற்றுகளே

10 அடி (சுமார் 3 மீ) உயரமும் எவ்வளவு அகலமுமான எந்த நீள்சதுர வாசலுக்குமேற்ப யூனியன் மடியுங்கேற்றுகள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

குறிப்பிட்ட தேவைகளுக்கேற்ற வேலைமாதிரிகளும், விலை விபரமும் தேவையானால் விண்ணப்பித்தால் அனுப்பிவைக்கப்படும்.

உற்பத்திசெய்து விற்பனை செய்பவர்கள்
சாமுவெல் சன்ஸ் அண்ட் கம்பனி லிமிட்டெட்
த. பெ. எண் 46, 371, பழைய சோனகத் தெரு, கொழும்பு 12. டெலிபோன் 32341 (4 லைன்கள்)

கிளை: 206/208, ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம் தொலைபேசி: 462, யாழ்ப்பாணம்

மணிவாக்கு

நான் தேவசந்நிதானத்திலிருக்கிறேன் என்று கூடுதலாய் நினைக்கிறேன். அதுவே தாய்மையாய் இருக்கிறதற்கு நல்லவழி.

— யோக சுவாமிகள்

# நமது நோக்கு

## மூன்றும் உலகின் முதல் எதிரி

மூன்றும் உலக நாடுகள் வறுமையால் பீடிக்கப்பட்டிருப்பது பலருக்குத் தெரியும். ஆனால் வறுமையிலும் செம்மையாக வாழமுடியுமென்ற அறிவற்றவர்களாயிருப்பதே மிகக் கொடியது.

மூன்றும் உலகின் குழந்தைகளில் பாதிப்பேர் போஷாக்கின்மையால் பிறக்கும் போதே ஆரோக்கியம் குறைந்தவர்களாகவும் ஐந்து வயதளவில் பல தொற்று நோய்களுக்குப் பலியாகவும், தப்பினால் நோயாளிகளாகவும் வாழ நேரிடுகின்றது. இது ஐ. நா. பல்கலைக் கழகத்தின் ஆராய்ச்சி முடிவாகும்.

இதனை ஏற்று இதற்கு வழிகாண எங்கள் நாடு, எங்கள் மாவட்டம் தக்க இடமளிக்கவேண்டும். நாடு முழுவதிலும் குறிப்பாக வறிய குடும்பங்களில் குழந்தைகள் மட்டுமல்ல வளர்ந்தவர்களுங் கூட போஷாக்கின்மையால் பல நோய்களுக்கு ஆளாகின்றனர்.

வறுமை, வறுமையால் விளையும் அறிவீனம் - இவ்விரண்டும் முக்கிய காரணங்களாகும்.

சீன மக்களின் போஷாக்கின்மையைப் போக்க சோயா அவரை அவர்களின் சாதாரண உணவில் எத்தகைய இடம்பெறுகிறதென்பதை யாழ்ப்பாண வாசியாகிய திருமதி இராணி சின்னத்தம்பி அங்கு நேரில் கண்ட அனுபவத்தை தெளிவான தமது கட்டுரையில் விளக்குகின்றார். ஊட்டச்சத்து நிறைந்த உணவு எது என்பதை நாங்களும் அறிந்திருக்கின்றோம். புரதம், இரும்பு, உயிர்ச்சத்து (Vitamins) நிறைந்த இந்த உணவு, மாவாகவும், சாறு, பால், தயிர் போன்ற 110 வேறுபட்ட உணவுவகைகள் செய்வதற்கு சீனமக்கள் கற்றுக் கொண்டனர். நாமென்ன செய்கின்றோம்?

உலகின் மிகக் கீழ் நிலையிலிருந்த சீனு இன்றைய உச்சநிலை அடைந்திருப்பதற்கு உணவில் ஏற்பட்ட புரட்சியும் ஒரு பெருங் காரணமெனக் கொள்ளலாம்.

வறுமையால் வரும் அறிவின்மையை நாம் இக்காலத்து மக்களைக் கருத்திற் கொண்டே குறிப்பிட்டோம்.

நாகரிக வாழ்வென்ற நாசகார வாழ்வு வறிய மக்களின் வாழ்வுக்கு உலை வைத்துக் கொண்டிருக்கிறது.

நம்முன்னோர் - இரண்டு தலைமுறைக்குமுன் வாழ்ந்தோர் - பலர் வறுமையில் வாழ்ந்தவர்கள். ஆனால் தேக சௌக்கிய முடையவராக நீண்டகாலம் வாழ்ந்தவர்கள்.

உணவு ரீதியில் அவர்களின் வாழ்க்கை இயற்கையோடமைந்தது. கிழமைக்கொன்று அல்லது இரண்டு முறை சோறு உண்டவர்களோ என்பது சந்தேகம். குரக்கன், வரகு, சாமி, சிறு கிழங்கு, பனையின் ஒடியல் பிட்டு, கூழ், பனாட்டு, உணவில் முதலிடம் பெற்றன.

காய்கறிவகைகள் விலைக்கு வாங்குவது அக்காலம் அரிது. தங்கள் தோட்டங்களில் உறபத்தி செய்வதும் உண்டு ஆனால் காடு மாதிரி தானகவே உண்டான இலை குழைகளை மிக அவர்களிலிருப்பி உண்டனர். வேலிகளிற் படரும் முசுட்டை, முல்லை, கொவ்வை, காரை, முருங்கை சண்டி, மொசு மொசுக்கை போன்ற இலைகளை கறியாகவும், வறையாகவும், பச்சடியாகவும் உண்டனர். நோயற்ற வாழ்வு வாழ்ந்தனர்.

சோறும், கோதுமை உணவும் இன்று இவற்றை அடித்துக்கலைத்து விட்டன. விளைவு! ஆஸ்பத்திரிகளில் நீண்ட கியூக்கள்.

விஞ்ஞான ரீதியில் மரக்கறி வகைகளில் இலைதழை உணவுக்கு முக்கிய இடம் கிடைத்திருக்கிறது. எனவே அந்த ரீதியாகவும் இவற்றை மீண்டும் நாடுவது அவசியமாகின்றது.

## கிறிக்கட்

சர்வதேச கிறிக்கட் விளையாட்டு ஸ்தாபனத்தில் இலங்கைக்கு அங்கத்துவம் கிடைத்திருப்பது மிகுந்த பாராட்டுக்குரியது.

இந்நாட்டின் கிறிக்கட் வீரர்கள் பலர் சர்வதேச தரத்துக்கு தகுதியானவர்கள் இங்கு இந்த ஆங்கில விளையாட்டு நீண்டகாலமாகப் பயிற்றப்பட்டு வருகிறது. பெரிய கல்லூரிகளிலும், கொழும்பு மாநகரம் மற்றைய பெரிய நகரங்களிலும் ஆர்வத்துடனும் திறமையுடனும் விளையாடப்படுகிறது.

சர்வதேச அந்தஸ்து இலகுவான காரியமல்ல. எனவே இப்புதிய உயர்வு இதற்கு இன்னும் கூடிய மதிப்பைச் சம்பாதித்துள்ளது.

பெரிய டெஸ்ற் (Test) ஆட்டங்களில் பங்குபற்றும் பேறு இலங்கைக்குக் கிடைத்திருக்கிறது. கொழும்பில் தீவிர ஆட்டங்களை மக்கள் நேரில் பார்த்து ரசிக்கவும், எங்கள் விளையாட்டு வீரரை ஊக்குவிக்கவும் இந்த உயர்ச்சி உதவும்.

யாழ்ப்பாணத்தின் பிரபல கல்லூரிகள் பெரும் திறமைசாலிகளை உருவாக்கிவந்திருக்கின்றன. இவர்களுக்கு இலங்கை மாணவர் கோஷ்டியில் இடம் கிடைக்கிறது முயற்கொம்பு எனவே வளர்ந்தவர்கள் ஆட்டத்தில் இவர்கள் முன்னேறி டெஸ்ற் விளையாட்டில் பங்குபற்றுவது எந்நாளோ?

இந்தவிடயத்தில் நாம் பின்தங்கிய பகுதியாகக்கவனித்து இடமளிப்பது 'கிறிக்கட்' ஆகுமல்லவா?

'கிறிக்கட்' என்ற சொல் நியாயம் வழங்குவதையும் குறிக்கின்றது இந்தவிளையாட்டின் முக்கியநோக்கம் நியாயம் வழங்கும் பண்பை வளர்த்தல்.

அகில இலங்கை கிறிக்கட் சங்கத்தின் தலைவரான காணி, காணி அபிவிருத்தி அமைச்சர் திரு. காமினி திசநாயக்கா யாழ்ப்பாணத்தை இவ்விடயத்தில் சற்றுத் தன்மை கொண்டு கவனிப்பாரா?

# சீனவில் புதுமலர்ச்சி பெறும் சோயாவும் பயன்களும்

சோயா அவரை 4,000 ஆண்டுகளுக்கு மேலாகச் சீனவிற் பயிரிடப்பட்டுவருவதாகக் கூறப்படுகிறது. சோயா அவரை பயிரிடுதல் முதன் முதல் சீனவிற்தான் தோன்றியதாகவும் சொல்லப்படுகிறது. ஆரம்பத்தில் இது ஒருபடைபற்பொருளாக, அதாவது அவிர் பொருளாக மட்டுமே பயன்படுத்தப்பட்டது. கி. பி முதலாம் நூற்றாண்டில் சோயா அவரைப்பயிர்ச்செய்கை ஐரோப்பிய நாடுகளுக்குப்பரவியது.

சீனவின் வடகிழக்குப்பிரதேசமே பிரதான சோயா அவரைப்பயிர்ச்செய்கைப் பிரதேசமாய் விளங்குகிறது. கரிய கண்ணும்புச்சத்து நிறைந்த அந்த நிலத்தில் விளையும் அவரை விதைகள் அளவிற் பெரியனவாயும் புரதச்சத்தும் எண்ணெய்ப்பற்றும் மிகுந்தனவாயும் காணப்படுகின்றன, இதைவிட மஞ்சல் நதிப்பிரதேசமும் பிரதான சோயா அவரைப்பிரதேசங்களாக விளங்குகின்றன

ஒருகாலத்தில் பட்டு, தேயிலை ஆகியவற்றுடன் சோயா அவரையும் சீனவின் பிரதான ஏற்றுமதிப்பொருட்களுள் ஒன்றாய் இருந்தது. ஆனல் இந்த நூற்றாண்டின் அறுபதாம் எழுபதாம் ஆண்டுகளிற் தானியச் செய்கைக்கு முதலிடம் கொடுக்கப்பட்டதால் சோயா அவரையின் உற்பத்தி குறைந்தது. ஆனல் தற்போது மீண்டும் சோயா அவரை உற்பத்தியில் அக்கறை காட்டப்பட்டு வருகிறது.

சோயா அவரை சீன மக்கள் விரும்பி உண்ணும் உணவில் ஒன்றாக விளங்குகிறது. அது மிகுந்த ஊட்டச்சத்து நிறைந்தது. அதில் 40விழுக்காடு புரதமும், 20விழுக்காடு கொழுப்பும் இருக்கிறது, இவற்றைவிட உயிர்ச்சத்து A, B, D, E, என்பனவும் கால்சியம் பொசுபரசு இரும்பு, முதலிய சத்தும் நிறைந்திருக்கிறது. இதில் கொலசரல் CHOLESTORBL மிகமிகக் குறைவாயிருப்பதால் உயர் இரத்த அழுத்த நோயாளரும், இரத்த நாடிச்சுவர்த் தடிப்பு நோயாளரும் இருதய நோயாளரும்கூடப் பயமின்றி உண்ணலாம்

சோயா அவரையிலிருந்து சோயா அவரை மா, சோயாச் சாறு, சோயாப்பால், சோயா தயிர் முதலிய 110 வேறுபட்ட உணவுவகைகள் செய்யப்படுகின்றன இன்னும் சோயா அவரையைச்சில நாட்கள் முளைக்கவிட்டு வரும் சோயா முளையையும் சீன மக்கள் உணவு...

(5ம் பக்கம் பார்க்க)

- திருமதி இராணி சின்னத்தம்பி -

### கிரிமலைக் கேணிவரி---

21-7-81 "ஈழநாடு" 6வது பக்கத்தில் கீரிமலைக் கேணிவரியை நீக்குக? என்ற தலைப்பில் வெளிவந்த செய்தியில் இறு திருத்தம் செய்யவும். அச்செய்தியில் குறிப்பிட்டிருந்தபடி உள்ளூராட்சித் தலைவர்களும் என்ற வாசகத்தை நான் பேசவில்லை சில ஆணையாளர்கள் என்றும் குறிப்பாக அச்சுவேலிக்கிராமசபை நிர்வாகம் என்றே குறிப்பிட்டிருந்தேன். மேற்படி உள்ளூராட்சித் தலைவர்கள் பற்றி எனது பேச்சில் பேசவில்லை என்பதை வெளியிடுமாறு வேண்டுகிறேன்.

க. சின்னத்துரை
யா. மா. அ. ச.
உறுப்பினர்
ஆவரங்கால்
புத்தூர்.

## மக்கள் கருத்து

உங்கள் வைப்புத் தொகைக்கு உயரிய வருமானம் உறுதியான பாதுகாப்பு

22% வரை வருட வருமானம் பெறும் 1 வருட சேமிப்புத் திட்டம்.

27% வரை வருட வருமானப் பெறும் 2 வருட சேமிப்புத் திட்டம்.

மெர்க்கன்டைல் கிறெடிட் லிமிட்டெட்

இலங்கையில் அதி பெரியதும் உறுதிவாய்ந்ததுமான ஓர் நிதி நிறுவனம்.

மாதாந்தமோ முதிர்ச்சியின் பின்னரோ வருமானம் செலுத்தப்படக் கூடிய திட்டங்களைக் கொண்டது.

பாரிய அளவிலான மூலவளங்களைக் கொண்ட நிறுவனம்

மொத்த ஆதனம் ரூபா 32 கோடிக்கும் மேல் மூலதனமும் ஒதுக்கீடுகளும் ரூபா 4 கோடிக்கும் மேல்

பொது மக்களின் நம்பிக்கையைப் பெற்று மகிழும் நிறுவனம்.

6500 க்கும் அதிகமான வைப்பாளருடன் ரூபா 17 கோடியே 5 லட்சத்திற்கும் மேலான தொகையினை வைப்புப்பணமாகக் கொண்டது.

மெர்க்கன்டைல் கிறெடிட் லிமிட்டெட்

51, ஜனதிபதி மாவத்தை, கொழும்பு 1. தொலைபேசி: 26611 - 8.

கிளைகள்:

யாழ்ப்பாணம் : 11/8 ஸ்ரான்லி றோட். தொலைபேசி: 321
மாத்தறை : 27 1/1 தர்மபால மாவத்தை. தொலைபேசி: 2466
அனுராதபுரம் : 2. ஹரிஷ்சந்திர மாவத்தை. தொலைபேசி: 634
கண்டி : 115, (1ம் மாடி) கொட்டுகொடல வீதி. தொலைபேசி: 4196

சேவை துணைவர்கள் (ஏஜென்ட்மார்) எல்லா முக்கிய நகரங்களிலும் உள்ளனர்.

"மேலதிக விபரங்களுக்கு எமது யாழ்ப்பாணக் கிளை அலுவலகத்தை நாடவும்

MASTERS

# பிரிட்டனில் கறுப்புஇன மக்களைத் தாக்கும் திட்டம் அம்பலம்!

லண்டன், ஜூலை 23: பிரிட்டனில் கறுப்பு இன மக்களுக்கு எதிராகத் தாக்குதல் நடத்த மேற்கொள்ளப்படவிருந்த திட்டம் ஒன்று அம்பலத்துக்கு வந்துள்ளது.

எதிர்வரும் ஆகஸ்ட் மாதத்தில் லண்டனில் நடைபெறவிருக்கும் மேற்கிந்திய கறுப்பு இனமக்களின் மாநாட்டின் போது தாக்குதல் நடத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்ததாகவும், திட்டங்கள் பல "ஸ்கொட்லண்ட்யார்ட்" பொலிசாரிடம் அகப்பட்டுள்ளன.

வலதுசாரி அரசியல்வாதிகளின் ஆதரவுடன் திட்டப்பட்ட இத்திட்டங்கள்பற்றி பொலிசார் தீவிர விசாரணை நடத்திவருகின்றனர்.

இதேசமயம் அண்மையில் பிரிட்டனில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களுக்கு வலதுசாரி தீவிர அரசியல்வாதிகள் ஆதரவளித்து வந்துள்ளமையும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. [இ]

## அறவழிப் போராட்டக் குழு

# யாழ்.மா. சபைத்தலைவருக்கு 8கோரிக்கைகளுடன் மகஜர்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட அபிவிருத்தி சபைத் தலைவருக்கு, எட்டுக் கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றை அறவழிப் போராட்டக்குழு அனுப்பி வைத்துள்ளது.

அம்மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ள கோரிக்கைகளாவன:

"சமூகக் குறைபாடுகள் ஒழிப்புச் சட்டத்தை அமுல்படுத்தல்; சமூகப் பிரச்னைகளுக்கு சமாதான தீர்வு காணல்; வழிபாட்டுத்தலங்களில் நிர்வாக மேற்பார்வை; மூடநம்பிக்கைகளை களைய உழைத்தல்; சமூக சகோதரத்துவத்தை வளர்த்தல்; தொழில் மகத்துவம் பேணல், சுயதொழில் வாய்ப்பை ஏற்படுத்துதல்; உரிமை குறைந்தமக்கள் நலன்பேணல்" ஆகியனவாகும்.

மேலும் அம்மகஜரில், சாதி அமைப்பின் தாக்கத்தால் சமுதாயத்தில் எழுகின்ற பிரச்னைகளை கவனிக்க யாழ். மாவட்டத்திலுள்ள 16 உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலும் ஒவ்வொரு 'சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்' பதவியை உருவாக்கி நடைமுறைப்படுத்தி தீர்வுகாண வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் பிரதிகள் எதிர்க்கட்சி முதல்வர், யாழ். மாவட்ட எம். பீக்கள், மாவட்ட அபிவிருத்திச்சபை உறுப்பினர்கள், மாவட்ட செயலாளர், உதவி அரசாங்க அதிபர்கள் ஆகியோருக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. [மா

## லெபனுன் எல்லையில் போர் தொடர்கிறது

# பேச்சுக்கள் மூலம் சண்டையை நிறுத்த இஸ்ரேல் இணக்கம்

லண்டன், ஜூலை 23: தெற்கு லெபனுன் எல்லையில் கடும் சமரில் ஈடுபட்டுவரும் இஸ்ரேலியத் துருப்புக்கள் லெபனுனுக்குள் வேகமாக முன்னேறிச் செல்வதாக இஸ்ரேல் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளையில் இப்போரை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கு இஸ்ரேல் இணக்கம் தெரிவித்துள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பேச்சுவார்த்தை மூலம் போரை நிறுத்துவதற்கு இணங்கியுள்ள இஸ்ரேலினது இம்முடிவை அமெரிக்க அதிபர் திரு. றெகனின் விசேட தூதுவர் திரு பிலிப் ஹபீப்பிடம் தெரிவித்துள்ளது.

இஸ்ரேலின் இந்த முடிவுடன் லெபனுன் அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக திரு. ஹபீப் பெய்ரூட் சென்றுள்ளார்.

இதேசமயம் தெற்கு லெபனுன் எல்லையில் இஸ்ரேலியரின் விமானத் தாக்குதல் தீவிரமடைந்ததையடுத்து லெபனுனின் பல்வேறு இடங்களிலும் உடனடியாக விமான எதிர்ப்புப் பீரங்கிகளை நிறுத்த நடவடிக்கை எடுக்கப்படுவதாக சிரியா அறிவித்துள்ளது. (இ)

## ரமழான் சிந்தனை

களா நோன்புகளை பிடிப்பதாயின் ஸஃபான் மாதத்தின் அரைவாசிக்கு முன் நோற்றுக் கொள்ளுங்கள். அப்படி நோற்கவில்லையாயின் ரமழான் முடிந்ததன் பின்ப நோன்பு நோற்பது—ன் தென்டமும் உண்டாகியிருக்கின்றது. (ஆதாரம்: புஹாஉல் மராம்)

ஸஹர் முடிவு: 4-28, நோன்பு திறக்கும் நேரம்: 6-32

— தொகுப்பு: மௌலவியா பௌசியா கரீம்

## இளவாலைக் கோஷ்டிக் கலவரம்

# சந்தேக நபர்கள் நீதிமன்றத்தில் சரண்

(மாவிட்டபுரம்)

இளவாலை கோஷ்டிக் கலவரம் குறித்து தேடப்பட்ட பதினெட்டு சந்தேக நபர்களும் மல்லாகம் நீதிமன்றத்தில் சரண்புகுந்ததையடுத்து றிமாண்டில் வைக்கப்பட்டனர்.

இளவாலை சித்திப்பந்தல் என்னுமிடத்தில் மீன்வாடி அமைப்பது தொடர்பாக மூண்ட மோதலில் துப்பாக்கிப்பிரயோகம், வாள்வெட்டு என்பன இடம்பெற்று பலர் படுகாயமடைந்து யாழ்ப்பாண வைத்தியசாலையில் உயிர் தப்பியிருந்தனர்.

இது குறித்து ஏற்கனவே எட்டு சந்தேக நபர்கள் காங்கேசன்துறைப் பொலிசாரால் கைது செய்யப்பட்டு மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டபோது றிமாண்டில் வைக்கப்பட்டிருந்தனர். இது தொடர்பாக மேலும் 14 பேரை பொலிசார் தேடிவந்தனர்.

செல்லலிங்கம் குணம், செல்வராசா அருமைத்துரை, இன்னத்துரை சேவியர், இராஜேந்திரம் இராஜா, சீமாம்பிள்ளை அருமைத்துரை, செபஸ்தியாம்பிள்ளை மரியதாஸ், மரியதாஸ் மகாலிங்கம், மரியதாஸ் பேரின்பநாயகம், மரியதாஸ் ஜெயராசா, மரியதாஸ் ஜெயரத்தினம், செல்லத்தம்பி செல்லத்துரை, பொன்னுத்துரை புஷ்பராஜா இரத்தினம் பீற்றர், அலெக்ஸ் பொன்னுத்துரை ஆகிய பதினெட்டு சந்தேக நபர்களும் மல்லாகம் நீதிமன்றத்தில் சரண்டைந்ததையடுத்து, ஏற்கனவே றிமாண்டிலுள்ளவர்கள் இம்மாதம் 24ம் திகதிவரை

(5-ம் பக்கம் பார்க்க)

## அரசு வைபவங்கள் பகிஷ்கரிப்பு:

# அன்றுகூட்டணி எம்.பிக்கள் இன்றுஅரசஉத்தியோகத்தர்

## உடுப்பிட்டி எம். பி. கூறுகிறார்

(உடுப்பிட்டி)

"அன்று கூட்டணி எம்.பிக்கள் அரசாங்க வைபவங்களைப் பகிஷ்கரித்து தமது எதிர்ப்புக்களை அரசாங்கத்திற்கு காட்டி வந்தனர். ஆனால் இன்று அந்நிலைமை மாறி அரசாங்க உத்தியோகத்தர்கள் சிலர் அரசாங்க வைபவங்களைப் பகிஷ்கரிக்கும் நிலை எமது பகுதிகளில் உருவாகி வருகிறது."

மேற்கண்டவாறு உடுப்பிட்டி எம். பி. திரு. கே. இராசலிங்கம் புலோலி தெற்கு குடவத்தையில் கிராமியப் பாலமொன்றை நேற்று திறந்துவைத்து உரையாற்றுகையில் கூறினார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:

எமது பகுதிகளில் அரசாங்க உத்தியோகத்தர்கள் சிலர் காட்டும் இப்பகிஷ்கரிப்பு தமிழ்ஈழ லட்சிய வெற்றிக்கு அறிகுறியாகும். முன்னர் இத்தப்பால அடிக்கல் வைபவத்தில் அரசாங்க உத்தியோகத்தர்கள் ஒத்துழைப்பை வழங்கினர்.

இன்று இப்பகுதியின் கிராமசேவையாளர் தொடக்கம் உதவி அரசாங்க அதிபர்வரை இவ்வைபவத்தில் கலந்துகொள்ளாதது எமது இலட்சிய வெற்றிக்கு அறிகுறியாகும்.

இப்பகிஷ்கரிப்பு சகல தமிழ்ப் பகுதிகளுக்கும் பரவவேண்டுமென்பது எமது அவாவாகும் என்றார்.

யாழ். உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. அன்ரன் அல்பிரட் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் யாழ் மாவட்டசபை உறுப்பினர் திரு. தம்பிமுத்து உட்பட பலர் உரையாற்றினர்.

இவ்வைபவத்தில் கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் உட்பட அலுவலக உத்தியோகத்தர்கள் எவரும் கலந்துகொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (வெ)

## 6 மாதத்தில் 431 பேர் மரணம்!

[கொழும்பு]

இந்த வருடம் ஜனவரி மாதம் 1ந் திகதி முதல் ஜூன் மாதம் 30ந் திகதிவரையுள்ள காலத்தில் 431 பேர் வீதி விபத்துகளில் சிக்கி மரணம் அடைந்துள்ளனர்.

லொறி விபத்துகளினாலேயே கூடுதலானோர் இறந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. [து]

## மன்னாரில் போதை மாத்திரை

[மன்னார்]

போதைமாத்திரை வைத்திருந்தவர் பொலிஸ் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

தகவல் ஒன்றைபடுத்து மன்னாரை வசிப்பிடமாக கொண்ட ஒருவரை சோதனையிட்ட மன்னார் பொலிஸ் இன்ஸ்பெக்டர் சஹாபந்து இன்ஸ்பெக்டர் மத்து ஒட்ட, கான்ஸ்டபிள் யூசுப் ஆகியோர் சந்தேக நபரின் மடியில் இருந்த 18 போதை மாத்திரைகளைக் கைப்பற்றினர்.

இச்சம்பவம் தொடர்பாக விசாரணைமேற்கொண்ட மன்னார் பொலிசார் சந்தேக நபரை பொலிஸ் பிணையில் செல்ல அனுமதித்தனர்.

## ஆயுத

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாண மாவட்டத்தில் இடம்பெற்ற மூர்க்கத்தனமான ஆட்டூழியங்களுடன் சம்பந்தப்பட்டவர்களை கண்டுபிடித்து தண்டனை வழங்க வேண்டுமெனவும் பாதிக்கப்பட்டவர்களுக்கு காலதாமதமின்றித் தகுந்த நஷ்டஈடு வழங்கப்படவேண்டும் எனவும் இப்படியான சம்பவங்கள் மேலும் நடைபெறுமலிருக்க ஓர் அரசியல் தீர்வு காணவேண்டும்.

"சர்வஜன வாக்குரிமை வழங்கப்பட்ட ஐம்பதாவது ஆண்டைக் கொண்டாடும் இவ்வேளையில் அவசரகாலச் சட்டத்தின் கீழும் பாதுகாப்பு படையினரது அச்சுறுத்தலுடனும் தேர்தல் விதிமுறைகளுக்கு மாறாக நடைபெற்ற மாவட்ட அபிவிருத்தி சபை தேர்தல் மூலம் ஜனநாயகத்திற்கு சாவுமணியடிக்கப்பட்டுள்ளது. இந்நாட்டின் ஜனநாயக தேசப்பற்றுள்ள அனைத்து சக்திகளும் ஒன்றுதிரட்டி சர்வாதிகார ஆட்சிக்கு முதற்படியான இப்போக்கை முறியடித்து ஜனநாயகஉரிமைகளை பேணிப்பாதுகாக்கவேண்டும்.

"வசதிக் கட்டணங்களிலிருந்து ஆசிரியர்களை நியமிக்கும் வழக்கத்தை உடனடியாக நிறுத்தி வெற்றிடங்கள் ஆகிய நியமனங்கள் மூலம் நிரப்பப்படவேண்டும்

"வட பிரதேசத்தில் பல பாடசாலைகள் பதில் அதிபர்களைக் கொண்டே இயங்குவதுடன், பாடசாலைகளில் ஆசிரியர்கள் பற்றாக்குறை பெருமளவில் நிலவுவது இப்பிரதேசத்தில் கல்விச்சீரழிவை உண்டாக்கியுள்ளது. உடனடியாக இவ்விடங்கள் நிரப்பப்படவேண்டும். மேலும் காலதாமதமின்றி அனைத்து ஆசிரியர்களையும் ஒன்று திரட்டி நேரடி நடவடிக்கையிலிறங்கவேண்டும்". [மா]

# தமிழகத்தில் திமுக வகுப்புவாதத்தை தூண்டி விடுகிறது!

## அதிமுக செயற்குழு கண்டனம்

சென்னை, ஜூலை 22

தமிழகத்தில் அரசியல் ஆதாயம் தேடுவதற்காக திராவிட முன்னேற்றக்கழகம் வகுப்புவாதத்தைத் தூண்டி வருகிறது.

இவ்வாறு அ. தி. மு. க. செயற்குழு குற்றம் சமத்தியுள்ளது.

நேற்று நடைபெற்ற அ.தி.மு.க. செயற்குழுக் கூட்டத்தில் இன்றைய அரசியல் நிலை குறித்து ஆராயப்பட்டது.

தி. மு. க.வின் போக்கு குறித்து பேமற்டி கண்டனத் தீர்மானத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

நாட்டின் எல்லைப்புறத்தில் ஆபத்து ஏற்பட்டுள்ள இவ்வேளையில் தி. மு. க. தமிழகத்தில் வகுப்புவாதத்தைத் தூண்டிவருவது பாரதூரமான குற்றமாகும். தி. மு. க.வின் இந்த நடவடிக்கைகளுக்கு எதிராக மத்திய மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

எந்தக் கட்சியாக இருந்தாலும் அமைதியான போராட்டம் நடத்தினால் அரசு அனுமதிக்கலாம். (இ)

# இ. போ. ச. திருட்டுகள் அம்பலம்!

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பு இ. போ. ச. நிலையத்தில் கடந்த சில மாதங்களாக நடைபெற்றுவந்த திருட்டுக்கள் அம்பலமாகியுள்ளன. நிலையக்காவலாளி உட்பட பலர் பொலிஸ் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பு இ. போ. ச. நிலையத்தில் கடந்த சிலமாதங்களாக திருட்டுக்கள் நடைபெற்றுவந்தன. கடந்த 14-ம் திகதி இரவு பாதுகாப்பு உத்தியோகத்தர் இராதா கிருஷ்ணன் என்பவர் இரவு 7-30 மணியளவில் கடமையில் ஈடுபட்டிருந்த போது 'பின்பக்கம் மனிதநடமாட்டம் கேட்டதாம். உடனே அவ்விடம் விரைந்தபோது ஒருவர் இ. போ. ச. நிலைய வளவிற்குள்ளும் மற்றவர் மதில் மீதும் அடுத்தவர் மறுபக்கமும் நின்று டயர்களைத் திருட முயன்றுகொண்டிருந்தனராம் இவரைக் கண்டதும் அவர்கள் ஓடத்தொடங்கிய போதிலும் ஒருவர் அகப்பட்டு மட்டக்களப்பு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

பொலிஸார் விசாரணையில் ஈடுபட்டபோது கைதானவரின் வாக்குமூலத்தை கொண்டு மற்றுமொருவர் கைது செய்யப்பட்டார்.

இதனைத்தொடர்ந்து நடைபெற்ற விசாரணைகளின் பலனாக சுமார் முப்பதாயிரம் ரூபாய் பெறுமதியான பல் டயர்கள் பதினொன்றில் ஐந்து காத்தான்குடியிலுள்ள லொறி ஒன்றிலும் மூன்று பாவித்த நிலையிலும் நான்கு மற்றுமொரு லொறியிலும் ஏனையவை ஒரு வீட்டிலும் மீட்கப்பட்டன. இச்சம்பவம் தொடர்பாக மட்டக்களப்பு பொலிசார் சந்தேகத்தின் மீது மட்டக்களப்பு இ. போ. ச. நிலையக் காவலாளி ஒருவர் உட்பட குடியிருப்புவாசியான ஆறுமுகம், சின்னத்தம்பி, இராசலிங்கம் ஆகியோரை விசாரணைக்கு உட்படுத்தியதோடு இருதயபுர வாசிகளான சிவலிங்கம் ஜோசப் ஆகியோரைத்தேடிவருகின்றனர்.

## படகு விபத்து 15 பேர் பலி!

[சேலம்]

சேலத்தில் நிகழ்ந்த படகு விபத்தொன்றில் 12 பெண்கள் உட்படப் பதினைந்து பேர் பலியாகினர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

49 பேரை ஏற்றிச்சென்ற படகு கவிழ்ந்ததை அடுத்து படகோட்டி உட்பட 34 பேர் காப்பாற்றப்பட்டுவிட்டனர் என்றும் 9 சடலங்கள் மீட்கப்பட்டுவிட்டனர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. [இ]

## நிரந்தர

[1ம் பக்கத் தொடர்ச்சி

ஆரம்பிக்கப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் 5 வீடுத்திட்டம், 10 வீட்டுத்திட்டம், 20 வீட்டுத்திட்டம் ஆகியன இதுவரையில் எல்லாத் தொகுதிகளிலும் பூர்த்தியாக்கப்பட்டுள்ளன.

"முதன்முறையாக இவவருடம் 30 வீட்டுத்திட்டங்கள் சுய உதவி அடிப்படையில் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் மேற்பார்வையின்கீழ் வீட்டுக்குரியவர்களே இவ்வீடுகளைக் கட்டுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

"இந்த வீடுகள், நல்லூர்த் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினருடைய வேண்டுகோளின்பேரில் உங்களுடைய கிராமத்தில் கட்டப்படுகின்றன. இக்கிராமத்தை, யாழ். மாவட்ட அதிபரின் கிராம விஸ்தரிப்புத் திட்டத்தின் கீழ் அபிவிருத்தி செய்வதற்கெனத் தீர்மானிக்கப்பட்டது. அரசாங்கத்தின் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் மக்களுக்கு அடிப்படைத் தேவைகளில் ஒன்றான நிரந்தர உறைவிட வசதிகள் அளிக்கவேண்டுமென்பதற்கமையத் தற்போது நிரந்தரமற்ற அமைப்புகளில் வசிப்பவர்களுக்கு இவ்வீடுகள் கட்டப்படுகின்றன. [மா-க]

## தேவை

சிமெந்து தொழிற்சாலைக்கு மெக்கானிக்குகள், பிற்றர்கள், வெல்டர்கள், எலக்ரிசன்மார்கள் தேவை. உடன் நேரில் வரவும். பலாலி கிராம அபிவிருத்தி சங்க அலுவலகம், நடேஸ்வராக் கல்லூரி வீதி, காங்கேசன்துறை. 0409

## புதிய பாராளுமன்றக் கட்டடம்

[கொழும்பு]

ஸ்ரீஜெயவர்த்தனபுர கோட்டையில் அமைக்கப்பட்டுவரும் இலங்கையின் புதிய பாராளுமன்றக் கட்டடம் அடுத்த வருடம் பெப்ரவரி மாதத்தில் திறந்துவைக்கப்படும்.

புதிய பாராளுமன்றக் கட்டடத்தை சுதந்திரதினத்தன்று திறந்துவைக்கஉத்தேசித்துள்ளதாகவும், பிரதமர் திரு. ஆர். பிரேமதாசா ஐரோப்பிய நாடுகளில் சுற்றுப்பிரயாணத்தை முடித்துக்கொண்டு வந்த பின்னர்தான் இதைப்பற்றி முடிவெடுக்கமுடியும் என்றும் ராஜாங்க அமைச்சர் திரு. ஆனந்த திஸ்ஸடி அல்விஸ் தெரிவித்தார். [து]

## கதிர்காமம்

# இராமகிருஷ்ண மடத்துக்கு ரூ 10 லட்சம் உதவி

## மந்திரிசபை இணக்கம்

[கொழும்பு]

கதிர்காமத்தில் இராமகிருஷ்ணமிஷன் மடத்திற்கு 10 லட்சம் ரூபா உதவி வழங்குவதென நேற்று நடந்த மந்திரிசபைக் கூட்டத்தில் கொள்கையளவில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

பிராந்திய அபிவிருத்தி அமைச்சர் திரு. செ. இராசதுரை, மந்திரிசபையில் இக் கோரிக்கையைச் சமர்ப்பித்திருந்தார்.

பிராந்திய அபிவிருத்தி அமைச்சு, யாழ்ப்பாணத்தில் நாவலர் மணிமண்டபம், மட்டக்களப்பில் விபுலானந்தர் நிலையம், கதிர்காமத்தில் யாத்திரிகர் மடம் ஆகியவற்றைக் கட்டுவதற்கான திட்டமும் மந்திரிசபையில் கொள்கையளவில் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இத்திட்டங்களையும் அமைச்சர் திரு செ. இராசதுரை, மந்திரிசபையில் சமர்ப்பித்திருந்தார் [ம-க]

# தாயார் கண்டித்ததால் மகன் தற்கொலை

[யாழ்ப்பாணம்]

தாயார் கண்டித்ததால் மனமுடைந்த மகன் நச்சுத்திராவகம் குடித்துத் தற்கொலை செய்துகொண்டார்.

திருநெல்வேலியைச் சேர்ந்த நாகலிங்கம் தவராசாவின் மரண விசாரணையின் மேற்கண்ட விபரம் தெரியவந்தது.

யாழ். மரண விசாரணை அதிகாரி திரு. எஸ். எஸ். பிரான்சிஸ் மரண விசாரணை நடத்தினுர்.

இறந்தவர் நண்பர்களுடன் சேர்ந்து தீய வழியில் சென்று வந்ததால் தாயார் கண்டித்ததாகவும், இதனுல் அவர் மனமுடைந்து, தாயாரிடம் கைக்கடிகாரத்தையும், மோதிரத்தையும் கொடுத்துவிட்டு, மறுநாள் நச்சுத்திராவகம் குடித்தாரென விசாரணையில் கூறப்பட்டது.

விசாரணையின் பின் தற்கொலையெனத் தீர்ப்பளிக்கப்பட்டது. [சு]

## கரகோஷம் செய்யக்கூடாது

[யாழ்ப்பாணம்]

யாழ். மாவட்ட அபிவிருத்தி சபைக்கூட்டத்தில் ஒரு கட்டத்தில், பார்வையாளர்கள் பலத்த கரகோஷம் செய்தபோது யாழ். மாவட்ட தலைவர் திரு. எஸ். நடராசா பார்வையாளர்கள் பார்த்துக் கொண்டிருக்கலாமே தவிர கரகோஷம்செய்யக்கூடாது என்று கூறினுர்.

முன்னுள் உதவி அரசாங்க அதிபரான திரு. ஏ. தம்பிமுத்து சபையில் பேச எழுந்தபோது பார்வையாளர்கள் பலத்த கரகோஷம் செய்தனர்.

இச்சபை நடவடிக்கைகளில் சபை உறுப்பினர்கள் மட்டுமே பங்குபற்றலாம் என்றும் பார்வையாளர்கள் இனிமேல் கரகோஷம் செய்யக்கூடாது என்றும் அவர்கள் சபை நடவடிக்கைகளைப் பார்த்துக்கொண்டிருக்கலாம் என்றும் தலைவர் தெரிவித்தார். [க-அ]

## மட்டுநகர் வாகன விபத்து

# ஒருவர் பலி, மற்றொருவர் படுகாயம்; சாரதி கைது

[மண்முனை]

மட்டக்களப்பு கல்லடிப் பாலத்தில் நேற்று நடந்த வாகன விபத்தில் 20 வயதான அந்தோனிப்பிள்ளை அரியநாதன் ஸ்தலத்தில் மரணமானுர். காயமடைந்த 14 வயதான ஞானம் சின்னராசா ஆபத்தான நிலையில் மட்டக்களப்பு அரசினர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

அம்பாறை சீனிக் கூட்டுத்தாபனத்தைச் சேர்ந்த வாகனமொன்று சைக்கிளுடன் மோதியதால் இவ்விபத்து ஏற்பட்டது.

வாகனச் சாரதியான ஸ்ரீசேன பெரேரா பொலிசாரால் கைதுசெய்யப்பட்டார்.

இந்த விபத்து நடப்பதற்கு அரை மணித்தியாலத்தின்முன் இதே வாகனம் தாழங்குடா சந்தியில் மினிபஸ் ஒன்றுடன் மோதியதால் மினிபஸ் சேதமடைந்ததுடன் பல பிரயாணிகளும் காயமடைந்ததாகவும், விபத்தின் பின் வாகனம் நில்லாமல் சென்றுவிட்டதாகவும் மினி பஸ் சாரதி பொலிஸில் புகார்செய்திருந்தார்.

மட்டக்களப்புப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. ஆர். அரபின் தலைமையில் சென்ற பொலிஸ் கோஷ்டி, வாகன சாரதியை மட்டக்களப்பில் வைத்துக் கைதுசெய்தனர்.

சாரதி வைத்திய பரிசோதனைக்குட்படுத்தப்பட்டார். அவர் மதுபோதையில் இருந்ததாக வைத்திய அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

மரண விசாரணை நடத்திய மட்டக்களப்பு மரணவிசாரணை அதிகாரி திரு. த. சிவநாதன் விபத்து மரணம் எனத் தீர்ப்பளித்து, சாரதி பெரேராவை மட்டக்களப்பு நீதவான் முன்னிலையில் ஆஜராகுமாறு உத்தரவிட்டார். [க]

## அமிர் மீதான—

[1ம் பக்கத் தொடர்ச்சி]

அதன் பின் சபையை விட்டு வெளியேறுவார்கள் என்றும் தெரியவருகிறது.

### கம்யூனிஸ்ட்கட்சி

கலவான எம். பி. திரு. சரத் முத்தட்டுவேகம [கம்யூனிஸ்ட்] கலந்துகொண்டு விளக்கம் ஒன்றை அளித்துவிட்டு வெளியேறுவாரெனத் தெரியவருகிறது.

சபை இன்று காலை 10 மணிக்குக் கூடி இரவு 7-30 மணிவரை நடைபெறும். நாளை சபை மீண்டும் காலை 10 மணிக்குக் கூடி இரவு 7-30 மணிக்கு வாக்களிப்பு இடம்பெறும்.

### 14 மணி நேரம்

எதிர்க்கட்சித் தலைவர் மீதான நம்பிக்கையில்லாத் தீர்மான விவாதத்திற்கு 14 மணித்தியாலங்கள் ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் அரசாங்கக் கட்சியினருக்கு 8 மணித்தியாலமும், எதிர்க்கட்சியினருக்கு 6 மணித்தியாலமும் ஒதுக்கப்பட்டுள்ளன [ம க-அ]

## நைரோபி செல்கிறுர்

[யாழ்ப்பாணம்]

சர்வதேச இயற்கை விவசாய சம்மேளனத்தின் தென் கிழக்காசிய இணைப்பதிகாரி திரு. ஆர். டி. கருணைராஜன் நைரோபி, கென்யாவுக்கு கருத்தரங்கொன்றில் மூன்றும் உலக நாடுகளின் பிரதிநிதியாகக் கலந்துகொள்வதற்காக அடுத்த வாரம் விஜயம்செய்யவுள்ளார்.

இவர் வில்லிபிராண்ட் கமிஷனின் வடக்கு தெற்கு அறிக்கை தொடர்பானகருத்தரங்கிலும், 'சக்தி' தொடர்பாக ஐ. நா. ஸ்தாபனம்நடத்தும் கருத்தரங்கிலும் அங்கு கலந்துகொள்ளவுள்ளார்.

கிராம அபிவிருத்தி ஆலோசகரான இவர், சித்தன்கேணியைச் சேர்ந்தவர். யாழ்ப்பாணக் கல்லூரி இயக்குநர் சபையிலும் அங்கத்தவராவர். [கு-வெ]

## மரணமான இவர் யார்?

[யாழ்ப்பாணம்]

மினி பஸ் விபத்தில் சிக்கியதாகக் கருதப்படும் பெண் ஒருவர் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் காலமானுர்.

பளை பொலிஸ் பகுதியில் இச்சம்பவம் இடம்பெற்றது. பளை பொலிஸ் நிலையத்திற்கும் ஆஸ்பத்திரிக்குமிடையில இச்சம்பவம் இடம்பெற்றது

பளை பொலிசாரால் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு அங்கு மரணமானுர்.

சுமார் 47 வயது மதிக்கத்தக்க இப்பெண் அழுக்கேறிய சேலையும் சட்டையும் அணிந்துள்ளார். பொதுநிறமான இவர் பிச்சை எடுப்பவராக இருக்கலாமென்று கருதப்படுகின்றது.

இவரது சடலம் அடையாளம் காண்பதற்காக சாவகச்சேரி ஆஸ்பத்திரி சவச்சாலையில் வைக்கப்பட்டுள்ளது

## குருபூர்ணிமா விழா

[யாழ்ப்பாணம்]

குருபூர்ணிமா விழாவை முன்னிட்டும் சுவாமி சிவானந்தஜி மகராஜ் மகாசமாதியடைந்த 18வது புண்ணியதிதி ஆகியவற்றை முன்னிட்டு நல்லூர் திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் நடைபெற்றுவரும் தியானம் பஜனை நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ள பாரத நாட்டிலிருந்து பிரம்மா குமாரிகள் சாந்தா, லக்ஷ்மி ஆகியோர் நேற்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தனர்.

இவர்களை திவ்ய ஜீவன சங்கத் தலைவர் திரு. சி. சுனகாத்தினமும், ஜோதிசுவாமிகளும் மற்றும் அங்கத்தவர்களும் யாழ். புகையிரத நிலையத்தில் வரவேற்றனர்.

இன்று தொடக்கம் 7 நாட்களுக்கு இவர்கள் காலையும் மாலையும் 'இராஜயோகம் பற்றி திரைப்படக்காட்சியுடன் விளக்குவார்கள். [மா-க]

## சங்க பிஷேகம்

[சுழிபுரம்]

தொல்புரம் வழுக்கம்பறை மகாமாரியம்மன் கோவில் சங்காபிஷேகம் இம்மாதம் 31ந் திகதி நடைபெறவிருக்கிறது.


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை-

## வாகனங்களின் விற்பனை

கீழே குறிப்பிடப்பட்டுள்ள வாகனங்களின் விற்பனைக்காகப் பொறியிடப்பெற்ற கேள்விகள் இணைப்பட்டியல் 1981ஆகஸ்ட் 5ம் தேதி பி. ப. 2-00 மணி வரை யாழ்ப் பல்கலைக்கழக நிதியாளரினுல் பெற்றுக்கொள்ளப்படும். கேள்விகள் மூடப்பட்டவுடன் அவை திறக்கப்பட்டு இறுதி முடிவு எடுக்கப்படும் கேள்வி திறக்கும்போது கேள்வியாளரை அல்லது அவரின் அதிகாரம் பெற்ற பிரதிநிதியைப் பிரசன்மாயிருக்குமாறு வேண்டிக்கொள்ளப்படுகின்றது.

வெற்றிபெறும் கேள்வியாளர் கேள்வி பற்றி இறுதித் தீர்மானம் எடுத்தவுடன் வாகனப் பெறுமதியான 50 சதவீதத்தைக் காசாகச் செலுத்துமாறு வேண்டிக் கொள்ளப்படுவார் மீதிக் கொடுப்பனவை ஐந்து நாட்களுள் செய்து வாகனத்தை அகற்றுதல்வேண்டும்.

1. 4 ஸ்ரீ 9428 பியட்கார்.
2. 33 ஸ்ரீ 9309லம்பிறெட்டா மூன்றுசக்கர வாகனம்.

மீளளிக்கப்படும் கேள்வி வைப்பாக 250/- ரூபாவும் மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணமாக 25/- ரூபாவும் பல்கலைக்கழகச் சிருப்பரிடம் செலுத்துதல் வேண்டும் பெற்றுக்கொண்ட பற்றுச் சீட்டுக்கள் விலைக்குறிப்புடன் பதிவுசெய்யப்பட்ட கடித உறையில் அனுப்பப்படல்வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல்மூலையில் "வாகனங்களைக் கொள்வனவு செய்வதற்கான விலைக் குறிப்பு" எனக் குறிப்பிடல் வேண்டும். யூலை 27 தொடக்கம் 31 வரை உதவிப் பதிவாளருடன [நிருவாகம்] தொடர்புகொண்டு வழமையான அலுவலக நேரங்களில் வாகனங்களைப் பார்வையிடலாம். எந்தவொரு விலைக்குறிப்பையும் ஏற்றுக்கொள்ளவோ அல்லது நிராகரிக்கவோ பல்கலைக்கழகத்திற்கு உரிமையுண்டு.

பதிவாளர்

திருநெல்வேலி.
யாழ்ப்பாணம்.
20-07-1981.

0393


இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட்டுக்காக யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதி 803ம் இலக்கத்திலுள்ள கலாநிலைய அச்சகத்தில் 1981ம் ஆண்டு ஜூலை மாதம் 23-ம் திகதி அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka
Regd No. CB 100366/81. P. O. Box 49, Jaffna. தொலைபேசி 7707, 389, 8126